தினமணி 28/02/2017

# நீரேற்று நிலையங்களில் ஆட்சியர் ஆய்வு

அரியலூர், பிப். 27: அரியலூர் மாவட்டம் நதியனூர், தா.பழூர்,ஜயங்கொண்டம் ஆகிய பகுதிகளிலுள்ள குடிநீர் வழங்கும் நீரேற்று நிலையங்கள், நீர் உறிஞ்சி கிணறுகளை மாவட்ட ஆட்சியர் எ.சரவணவேல் ராஜ் திங்கள்கிழமை ஆய்வு செய்தார்.

அப்போது அவர் தெரிவித்தாவது: அரியலூர் மாவட்டத்தில் கோடைக்காலங்களில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் தேவையை பூர்த்தி செய்திடும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில் திருமானூர், தா.பழூர் மற்றும் ஜயங்கொண்டம் ஆகிய ஒன்றியத்துக்கு உட்பட்ட 20-க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் மற்றும் குக்கிராமங்களுக்கு நதியனூர் கொள்ளிடம் ஆற்றில் உள்ள 4.5 மீட்டர் அகலமும், 8 மீட்டர் ஆழமும் கொண்ட நீர் உறிஞ்சி கிணற்றிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் சுமார் 7,13,680 லிட்டர் நாள் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், அனைத்து கிராமங்களுக்கும் பொதுமக்களின் அடிப்படை தேவையான நீர் தங்குதடையின்றி வழங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேலும், குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்தும் விதத்தில் நீர் உறிஞ்சி கிணற்றில் உள்ள மணல்களை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. பணிகளை துரிதமாக செய்ய குடிநீர் வாடிகால் வாரிய பொறியாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார் அவர். இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு



வைப்பூரிலுள்ள நீர் உறிஞ்சி கிணறை ஆய்வு செய்த ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி,மகளிர் திட்ட அலுவலர் கதிரவன், உதவி நிர்வாகப் பொறியாளர் நாகானந்த், நீர்நிலை ஆய்வாளர் தர்மலிங்கம், உதவி பொறியாளர் சிவசங்கரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.